**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.390/2016
Sessions)

( Prosecution P.W.1
Deposition of witness for (Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | பன்னீர்செல்வம் | -- | |
| Father's Name | பழனிவேல் | Calling | Drugs Inspector (Retired) |
| Village | ஓசூர் | Religion | |
| Taluk | ஓசூர் | Age | 71 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 21st day of November 2025.

**A11 to A13 absent. Petition filed.**

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்சமயம் மருந்துகள் ஆய்வாளராக சேலம் சரகம் 1ல் பணியாற்றி கடந்த 2012 ஆகஸ்ட் மாதம் பணியிலிருந்து ஒய்வு பெற்றுவிட்டு தற்சமயம் கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூாில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 27.12.2010 அன்று சேலம் சரகம் 1ல் மருந்து ஆய்வாளராக பணியிலிருந்தபோது பரோடா சா்ஜிக்கல் பிரைவேட் லிமிடெட், பரோடா என்ற மருந்து கம்பெனி பெயாில் சத்திரப்பட்டியிலுள்ள ஸ்ரீசக்திவேல் முருகன் டெக்ஸ்டைல்ஸ் என்ற கம்பெனியில் பரோடா சா்ஜிக்கல் பிரைவேட் லிமிடெட் என்ற பெயாில் Gauze Absorbent (Non sterilized) உற்பத்தி செய்யப்பட்டு V – Trans (India Limited) சுப்பரமணிய நகா் கேட் 1, சூரமங்கலம், சேலம்–5 என்ற டிரஸ்போா்ட் கம்பெனி மூலமாக பரோடாவுக்கு அனுப்பப்படுவதாக தமிழ்நாடு மருந்து கட்டுப்பாடு இயக்குநா், சென்னை. சேலத்திலுள்ள உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநருக்கு தகவல் தொிவிக்கப்பட்டது. இது சம்பந்தமாக உதவி இயக்குநா், உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநா் இது குறித்து ஆய்வு செய்து ஆய்வின்போது இந்த போலி மருந்து கண்டுபிடிக்கப்பட்டால் அதை மருந்துகள் மற்றும் அழகு சாதன சட்டம் 1940 U/s.18(a)(1) r/w sec.17(B) (e) படி நடவடிக்கை எடுக்கும்படி எனக்கு அறிவுறுத்தப்பட்டது. அதன் பெயாில் நானும் எனது கூட சேலம் 2 சரகம் மருந்துகள் ஆய்வாளா் ஆா்.அதியமான் அவருடன் ஆய்வுக்கு சென்றேன். ஆய்வின்போது V trans India Limited என்ற Transport கம்பெனியில் Transport Bill களையும் விற்பனை பில்களையும் ஆய்வு செய்தோம். அப்பொழுது மேலே கூறிய மருந்து பொருட்கள் Batch No.619 எண்ணிக்கை 10, Batch No.620 எண்ணிக்கை 10 ஒவ்வொரு bundle களில் 50 எண்ணிக்கையான சுருள்களும் இருந்தது. இது போலி தயாாிப்பு மருந்து எனக்கருதப்பட்டு மருந்துகள் மற்றும் அழகு சாதன சட்டம் 1940 Under Power of Seizure U/s.22 (1) (c) படிவம் எண். 16 படி மகஜா்

தயாா் செய்து அந்த மகஜா் அந்த Transport Company யின் Incharge ரவிச்சந்திரன் மற்றும் இரண்டு தனிநபா் சாட்சிகளான மணி மற்றும் கருப்பையா ஆகியோா் முன்னிலையில் மாதிாி மருந்துகளை Batch No.619 மற்றும் 620 லிருந்து எடுத்து தரம் குறித்து ஆய்விற்காக சென்னையிலுள்ள மருந்துகள் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு மீதமுள்ள மருந்து பொருட்களை கைப்பற்றப்பட்டு அதனுடன் கூடிய Documents Lorry receipt (consignee copy No.3650355 Dated 24.12.2010 எண்ணிக்கை 2 மற்றும் Invoice copy of Sirisakthivel murugan Textiles, sathirapatti, Rajapalayam. Invoice No.61 dated 24.12.2010 3 எண்ணிக்கையும் – Form – Declaration U/s.Gurarat value added tax, Register No.33886062447 –1 எண்ணிக்கையும் கைப்பற்றப்பட்டது. கைப்பற்றப்பட்ட அனைத்து ஆவணங்கள் மற்றும் மருந்து பொருட்களும் நீதிமன்ற நீதித்துறை நடுவா் எண்.2, சேலத்திற்கு உாிய ஆவணங்களுடன் ஒப்படைத்தேன். ஒப்படைக்கப்பட்ட PR No.21/2011 ஆகும். அசல் ஆவணங்கள் மேற்படி நீதிமன்றத்தில் உள்ளது.

<u>**11,12 ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

நான் 27.12.2010 ல் சேலத்தில் மருந்து ஆய்வாளராக இருந்தபோது உதவி இயக்குநர் மருந்துக்கட்டுப்பாட்டுத்துறை, சேலம் அவர்கள் சூரமங்களம் V Trans India Ltd., கோடவுனில் இருக்கும் மருந்துப்பொருள்களை ஆய்வு செய்து கைப்பற்றும் படி கூறினார். அவர் மதியம் 02.30 மணிக்கு வாய்மொழியாக கூறினார். நானும், அதியமானும் அந்த இடத்திற்கு உடனே சென்றுவிட்டோம். பொருள்களை கைப்பற்றி மகஜர் தயார் செய்து அதன் ஒரு நகலை கோடவுன் பொறுப்பாளர் ரவிச்சந்திரன் என்பவருக்குக் கொடுத்தோம். மகஜர் மற்றும் படிவம் –16 ஆகியவற்றை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. நான் 2012 ம் ஆண்டு ஆகஸ்டில் பணி ஓய்வு பெற்றுவிட்டேன். பகுப்பாய்வுக்கு அனுப்பினால் சுமார் ஒன்றரை வருடங்களில் அதன் முடிவு வரும். என்னுடைய பணிக்காலத்தில் அந்த பகுப்பாய்வு அறிக்கையை வாங்கவில்லை. கைப்பற்றப்பட்ட பொருள்கள் எந்த இடத்திலிருந்து வந்தது அது எங்கு கொண்டுசெல்லப்படுகிறது என்பது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. சேலம் நீதிமன்றத்தில் அந்தப் பொருள்களை தாக்கல் செய்துவிட்டு அது குறித்த அறிக்கையை சேலம், உதவி இயக்குநருக்கு தகவல் தெரிவித்துவிட்டோம். அந்த சமயத்தில் அண்ணாமலை என்பவர் சேலம் உதவி இயக்குநராக இருந்தார். மேற்படி அண்ணாமலை என்பவரை விசாரித்தால் கைப்பற்றப்பட்ட பொருள்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட விபரம் தெரியவரும். கைப்பற்றப்பட்ட பொருள் Gauze absorbent (Non Sterlite) அதன் அளவு 90 செ.மீX18 மீ. நீதிமன்றத்தில் அந்தப்பொருளை ஒப்படைத்தப்பிறகு மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. சேலம், உதவி இயக்குநர் உத்தரவினை சட்டப்படியாக பின்பற்றாமல் குற்றஇறுதியறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் என் பணியை சரியாக செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், சேலம் நீதிமன்றத்தில் நான் ஒப்படைத்தப் பொருளுக்கும் எந்த சம்மந்தமுமில்லை என்று சொன்னால் சரியல்ல. 11, 12 எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமுமில்லை என்று சொன்னால்

சரியல்ல. சேலம், உதவி இயக்குநர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கைப்பற்றப்படாத பொருளை கைப்பற்றியதாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>13ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் சேலம், V Transport Ltd–ல் கைப்பற்றிய பொருள்கள் பரோடா சர்ஜிக்கல்ஸ் பெயரில் சக்திவேல் முருகன் டெக்ஸ்டைல்ஸ் என்ற நிறுவனத்தில் தயார் செய்யப்பட்டது. 13ம் எதிரியான ஸ்ரீ பாக்கியலெட்சுமி சர்ஜிக்கல்ஸ் நிறுவனம் தொடர்பாக எந்த ஆவணமும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை** இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 21st day of November 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**